# அத்தியாயம் 1
# முகவுரை

ஒப்பந்தம் என்ற சொல் நம் அனைவருக்கும் பொதுவானது. ஒரு தினத்தில், நாம், பல்வேறு ஒப்பந்தங்களின் கட்சியாக இருக்கின்றோம். எடுத்துக்காட்டாக, நாம் காய்கறிக் கடையில் காய்கறி வாங்கும் போது, அவருடன் ஒப்பந்தத்தில் நுழைகின்றோம். அவர் ஒரு விலையை கூறுகின்றார். நாம் அதற்கு நமது இசைவைத் தெரிவிக்கின்றோம். அப்பொழுது ஒரு ஒப்பந்தம் உருவாகின்றது. நாம் பணத்தைக் கொடுக்கின்றோம். அவர் பொருளைக் கொடுக்கின்றார். அவ்வாறு, இருவரும், அவரவர்க்கு உள்ள கடமைகளைச் செய்து முடிக்கும் போது, ஒப்பந்தம் நிறைவேற்றப்படுகின்றது.

ஒப்பந்தச் சட்டத்தின் நோக்கம், செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் நியாயமானவை மற்றும் முறையானவை என்பதை உறுதி செய்வதும், ஒப்பந்தம் செய்துகொள்ளும் கட்சிகள், ஒப்பந்தத்தில் கூறப்படும் வகையில் செயல்படுவதன் மூலம் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதை உறுதி செய்வதும் ஆகும். சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு கட்சிகள் தங்கள் சொந்த விதிமுறைகளையும், நிபந்தனைகளையும் தீர்மானிக்க போதுமான சுதந்திரத்தை ஒப்பந்த சட்டம் வழங்குகிறது. உதாரணமாக, மறுபயன் (consideration) ஒரு ஒப்பந்தத்திற்கு அவசியம் என்று சட்டம் கூறுகின்றது. ஆனாலும், அது போதுமானதாக இருக்க வேண்டியதில்லை.

ஒப்பந்தம் என்பது சட்டத்தால் செயல்படுத்தப்படக் கூடிய (legally enforceable), சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்ட, ஒரு உடன்படிக்கை (agreement). இது குறைந்தபட்சம் இரண்டு தரப்பினரிடையே உருவாக்கப்படுகிறது. இதன் மூலம் உரிமைகள் ஒருவரால் பெறப்படுகின்றன, மற்றும் மற்றொரு தரப்பினர் மீது பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் சுமத்தப்படுகின்றன. ஏதாவது செயல் செய்ய ஒப்புக் கொண்ட கட்சி, அதைச் செய்யத் தவறினால், மற்ற கட்சிக்கு சட்டப்பூர்வமாக நிவாரணம் பெறும் உரிமை சட்டத்தால் வழங்கப்படுகின்றது.

**இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872**

இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 இயற்றப்படுவதற்கு முன், இந்தியாவில் உள்ள நீதிமன்றங்கள், ஆங்கிலப் பொதுச் சட்டங்களைத் தகுந்தவாறு பயன்படுத்தின. இந்திய சூழ்நிலைகள், பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப ஆங்கிலப் பொதுச் சட்டங்களைப் பயன்படுத்துவதில் சில சிரமங்கள் காணப்பட்டன. நீதிமன்றங்கள், இந்து தனிநபர் சட்டங்கள் மற்றும் முஸ்லீம் தனிநபர் சட்டங்களின் அடிப்படையிலும் வழக்குகளை முடிவு செய்யத் தொடங்கின. ஒரே சீராக நீதி வழங்க, இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 இயற்றப்பட்டது. இந்தச் சட்டம், ஆங்கிலப் பொதுச் சட்டத்தை (common law) அடிப்படையாகக் கொண்டது

இந்தச் சட்டத்தில், பொருட்களின் விற்பனை ஒப்பந்தம் (sale of goods), கூட்டாண்மை (partnership) தொடர்பான விதிகள், 1930 வரை இருந்தன.

- ஒப்பந்தச் சட்டத்தில் சரக்கு விற்பனை தொடர்பான விதிகளைக் கொண்டிருந்த, பிரிவுகள் 76 முதல் 123 வரை நீக்கப்பட்டு, சரக்கு விற்பனைச் சட்டம், 1930 என்ற மற்றொரு சட்டம் இயற்றப்பட்டது.
- இதே போல், கூட்டாண்மை தொடர்பான பிரிவுகள் 266-239 நீக்கப்பட்டு, இந்திய கூட்டாண்மை சட்டம், 1932 இயற்றப்பட்டது.

இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 ஒரு முழுமையான சட்டம் அல்ல. ஏனெனில், இது அனைத்து வகையான ஒப்பந்தங்கள் தொடர்பான விதிகளையும் உள்ளடக்கவில்லை.

- சரக்குகளின் விற்பனை, கூட்டாண்மை (partnership) ஒப்பந்தம் போன்ற பிற வகையான ஒப்பந்தங்களைக் கையாள்வதற்காக பிற சட்டங்கள் உள்ளன.
- இந்திய ஒப்பந்தச் சட்டம், -1872 ன் விதிகள், சரக்கு விற்பனைச் சட்டத்தின் வெளிப்படையான விதிகளுக்கு முரணாக இருப்பவை தவிர, மற்றவை பொருட்களின் விற்பனைக்கான ஒப்பந்தங்களுக்குத் தொடர்ந்து பொருந்தும் என்று சரக்கு விற்பனைச் சட்டம், 1930 (The Sale Of Goods Act, 1930) இன் பிரிவு 3 கூறுகிறது.
- அசையா சொத்து விற்பனை தொடர்பான ஒப்பந்தங்களுக்காக சொத்துரிமை மாற்றுச் சட்டம், 1882 (The Transfer Of Property Act, 1882) உள்ளது. அச்சட்டத்தின் பிரிவு -4ன் படி, ஒப்பந்தங்கள் தொடர்பான சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் அத்தியாயங்கள் மற்றும் பிரிவுகள், இந்திய ஒப்பந்தச் சட்டம், -1872ன் ஒரு பகுதியாக எடுத்துக்கொள்ளப்படும்
- மேலும், ஒப்பந்தச் சட்டம், சட்டபூர்வமாக நடைமுறைப்படுத்தக் கூடிய அல்லது சட்டரீதியான விளைவுகளை ஏற்படுத்தும் ஒப்பந்தங்களை மட்டுமே கையாள்கிறது.

ஒப்பந்தச் சட்டம் 1872-ல் இயற்றப்பட்டது. இது XI அத்தியாயத்தைக் கொண்டுள்ளது. இந்திய ஒப்பந்தச் சட்டம், பின்வரும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது:

(அ) ஒப்பந்தச் சட்டத்தின் பொதுக் கோட்பாடுகள்.

(ஆ) சிறப்பு வகையான ஒப்பந்தங்கள் (special contracts).

ஒப்பந்தச் சட்டத்தின் பொதுக் கோட்பாடுகள், பிரிவுகள் 1 முதல் 75 வரை உள்ளன. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் இந்த கோட்பாடுகள் அனைத்து வகையான ஒப்பந்தங்களுக்கும் பொருந்தும்.

ஈட்டுறுதி (Indemnity), பொறுப்புறுதி (Guarantee), ஒப்படை பெறுகை (Bailment) மற்றும் முகவாண்மை (Agency) போன்ற சிறப்பு ஒப்பந்தங்கள் குறித்த விதிகள், இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவுகள் 124 முதல் 238 வரை உள்ளன.

ஒப்பந்தச் சட்டத்தின் விதிகள், ஆளுக்கெதிரான உரிமையை (Jus in personem) அளிக்கின்றது. பொருள் சுட்டிய உரிமை (jus in rem) அல்ல.

**ஒப்பந்த உருவாக்கம் (Formation of contract):**

ஒப்பந்தச் சட்டம், 1872, பல்வேறு நபர்களால் மேற்கொள்ளப்படும் பல்வேறு வகையான ஒப்பந்தங்களைக் கையாள்கிறது. ஒரு ஒப்பந்தத்தின் முக்கியமான அம்சங்களை வரையறுக்கிறது.

முனைவு (Offer) அல்லது புரிவுரை (Proposal), ஏற்றுக்கொள்ளல் (Acceptance), மறுபயன் (Consideration) போன்றவை குறித்த விதிகளையும், மற்றும் ஒரு ஒப்பந்தம் செல்லத்தக்கது என கருதப்படுவதற்கு இணங்கப்பட வேண்டிய நிபந்தனைகளையும், மற்றும் ஒப்பந்த விதிமுறைகள் மீறப்படும் போது, ஏற்படும் அனைத்து பிரச்சினைகளுக்குமான தீர்வுகளையும் ஒப்பந்தச் சட்டம் வழங்குகிறது.

ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கு, பொதுவாக ஒரு முனைவு (offer), அதை ஏற்றுக்கொள்வது (Acceptance), மறுபயன் (consideration) மற்றும் ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்குக் கட்டுப்படுவதற்கான பரஸ்பர எண்ணம் (meeting of mind) ஆகியவை தேவைப்படுகிறது.

ஒப்பந்த உருவாக்கம் பின்வரும் நிலைகளைக் கொண்டிருக்கின்றது.

i. ஒரு நபர் தனது முனைவை (offer) மற்றவருக்குத் தெரிவிக்கிறார். அது எந்தச் செயலையும் செய்தல் அல்லது செய்வதைத் தவிர்த்தல் (act or omission) என்பதாக இருக்க வேண்டும்.

ii. ஒரு முனைவு (offer) ஏற்றுக் கொள்ளப்பட்டால் (acceptance), அது ஒரு வாக்குறுதியாக (promise) மாறும்.

iii. ஒரு வாக்குறுதி (promise) அல்லது வாக்குறுதிகளின் தொகுப்பு (set of promises) ஒரு உடன்படிக்கை (agreement).

iv. சட்டத்தின் வழி செயல்படுத்தக் கூடிய ஒரு உடன்படிக்கை, ஒரு ஒப்பந்தமாகும் (contract).

**ஒப்பந்த உருவாக்கம்: எடுத்துக்காட்டுகள்**

**முனைவு (offer):** வில்லியம் என்பவரும் வில்பிரட் என்பவரும் ஒரு கிராமத்து டீக்கடையில் சந்தித்தனர். வில்லியம் தனது பசுவை ₹50,000-க்கு விற்க விருப்பம் தெரிவித்தார். இது ஒரு முனைவு (offer).

**ஏற்றுக்கொள்ளல் (acceptance):** வில்பிரட் பசுவை ₹50,000 விலைக்கு வாங்க ஒப்புக் கொண்டார். இது ஒரு ஏற்றுக்கொள்ளல் (acceptance).

**வாக்குறுதி (promise):** ஒரு முனைவு (offer) ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன், அது ஒரு வாக்குறுதியாக (promise) மாறும்.

**உடன்படிக்கை (agreement):** ஒவ்வொரு வாக்குறுதியும் ஒரு உடன்படிக்கை (agreement) என்று சட்டம் கூறுகிறது. எனவே வில்லியம், வில்பிரட் ஆகியோர் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

**ஒப்பந்தம் (contract):** ஒப்பந்தச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு உடன்படிக்கை இருந்தால், சட்டபூர்வமாக செயல்படுத்தக் கூடியது. அது ஒப்பந்தமாகிறது (contract).

**செல்லாத ஒப்பந்தம்:**

- **உறுதியானதாக அல்லாமல் அல்லது உறுதி செய்ய இயலாததாக (not certain or not capable of made certain):** வில்லியத்திடம் இரண்டு பசுக்கள் இருந்திருந்தால், அவர்

எந்த பசுவை விற்கிறார் என்று ஒப்பந்தத்தில் தெளிவாக குறிப்பிடவில்லை என்றால், ஒப்பந்தம் செல்லாது. முனைவு (offer) மற்றும் ஏற்றுக்கொள்ளல் (acceptance) ஆகியவற்றின் நிபந்தனைகள் உறுதியானதாக அல்லாமல் அல்லது உறுதி செய்ய இயலாததாகவோ (not certain or not capable of made certain) இருந்தால் உடன்படிக்கை செல்லாது.

- **கருத்தொருமை (consensus ad idem):** வில்லியத்திடம் இரண்டு பசுக்கள் இருந்தால், அவர் தனது வெள்ளைப் பசுவை விற்பனைக்குக் கொடுக்க நினைத்து இருக்கும் போது, வில்பிரட், அவரது பழுப்பு நிற பசு விற்பனைக்கு வருவதாக நினைத்தால், ஒப்பந்தத்தின் கருப்பொருள் குறித்து அதே எண்ணத்தில், இருவரும் மனதில் கொள்ளவில்லை என்பதனால் கருத்தொருமை (consensus ad idem) இல்லை. ஒப்பந்தத்தின் பொருள் குறித்து இருவரும் தவறு (Mistake) செய்துள்ளனர். ஒப்பந்தம் செல்லாது.
- **ஒப்பந்தச் சீர்குலைவு (frustration of contract):** வில்லியமும், வில்பிரட்டும் டீக்கடையில் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்த போது, வீட்டில் இருந்த பசு இறந்து விட்டது. ஒப்பந்தத்தின் கருப்பொருள் அழிக்கப்பட்ட காரணத்திற்காக ஒப்பந்தம் செல்லாது. இது ஒப்பந்தச் சீர்குலைவு (frustration of contract) எனப்படும்.
- **பின்னர் நிகழ்ந்த நிகழ்வு (subsequent incidence):** வில்லியமும், வில்பிரட்டும் ஒப்பந்தம் செய்து கொண்ட போது, 30 நாட்களுக்குப் பிறகு விலைப் பணத்தைக் கொடுத்துவிட்டு பசுவை ஒப்படைக்க (delivery) ஒப்புக் கொண்டனர். ஒப்பந்த தேதிக்கு 10 நாட்களுக்குப் பிறகு, ஒப்பந்தம் நிறைவேற்றுவதற்கு முன்னர், பசு இறந்து விட்டது. ஒப்பந்தத்தின் உருவாக்கத்தின் போது செல்லுபடியாகும் மற்றும் நடைமுறைப்படுத்தக் கூடியதாக (valid and enforceable) இருந்த ஒப்பந்தம், பசுவின் மரணத்தின் காரணமாக செல்லாததாகின்றது. ஒப்பந்தத்தின் உருவாக்கத்தின் பின்னர் நிகழ்ந்த நிகழ்வான (subsequent incidence), பசுவின் மரணம் காரணமாக ஒப்பந்தம் செல்லாததாகின்றது (void).
- **பணய ஒப்பந்தம் (wagering contract):** ஒரு குறிப்பிட்ட நாளில் மழை பெய்தால் வில்பிரட்டுக்கு தனது பசுவை, வில்லியம் இலவசமாக கொடுக்க வேண்டும் என்றும், மழை பெய்யவில்லை என்றால் வில்பிரட் ₹50,000 வில்லியத்திற்கு கொடுக்க வேண்டும் என்றும், வில்லியமும், வில்பிரட்டும் உடன்படிக்கை செய்து கொண்டனர். இது ஒரு பணய உடன்படிக்கை (wagering agreement) மற்றும் அது செல்லாது. கட்சிகளுக்கு தொடர்பில்லாத ஒரு நிகழ்வின் பேரில் உடன்படிக்கை செயல்படுத்தப்பட வேண்டுமென்றால், அந்த உடன்படிக்கை செல்லாது.

**ஒப்பந்தத்தில் மாற்றங்கள்**

- **ஒப்பந்த ரத்து (rescinding of contract):** ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு, வில்லியமும், வில்பிரட்டும், கிராமத்து டீக்கடையில், ஒப்பந்தம் நிறைவேற்றுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு முன்னதாக ஒரு நாளில், மீண்டும் சந்தித்தனர். பசுவை விற்பதற்கு தனது குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவிப்பதாக வில்லியம், வில்பிரட்டிடம் தெரிவித்தார். பசுவை வாங்குவதற்கு, தனது மனைவியும் எதிர்ப்பு தெரிவிப்பதாக வில்பிரட் கூறினார். இருவரும் தங்கள் ஒப்பந்தத்தை தொடர வேண்டாம் என்று முடிவு

செய்து ஒப்பந்தத்தை இரத்து செய்ய ஒப்புக் கொண்டனர். இது ஒப்பந்த ரத்து எனக் கூறப்படுகின்றது.

- **மாற்றங்கள் (alteration):** ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட வில்லியமும், வில்பிரட்டும், ஒப்பந்தம் நிறைவேற்றுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு முன்னதாக ஒரு நாளில் சந்தித்தனர். 30 நாட்களுக்குள் விலைப்பணத்தைக் கொடுத்து பசுவைப் பெற்றுக்கொள்ள சம்மதித்து இருந்த வில்பிரட், தான் எதிர்பார்த்த பணம் கிடைக்க தாமதமாவதால், தனக்கு மேலும் 15 தினங்கள் பணம் செலுத்த அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டார். வில்லியம் சம்மதித்தார். இங்கே, ஒப்பந்தம் மாற்றப்படுகின்றது.

- **புத்தீடு (novation):** வில்லியமும், வில்பிரட்டும் ஒப்பந்தம் நிறைவேற்றுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு முன்னதாக ஒரு நாளில் சந்தித்தனர். வில்பிரட் வாங்குவதாக இருந்த பசுவை, தனக்குப் பதிலாக தனது மகளுக்கு கொடுக்க வேண்டுமென வில்லியத்திடம், வில்பிரட் கேட்டுக் கொண்டார். வில்லியம் சம்மதித்தார். இங்கே, ஒப்பந்தம் புதிதாக எழுதப்படுகின்றது. இது புத்தீடு (novation) ஒப்பந்தம் ஆகும். ஒப்பந்தத்தில் மாற்றம் செய்யப்படுகின்றது. புதிய கட்சிகள் ஒப்பந்தத்தில் இணைகின்றார்கள். பழைய கட்சிகள் இருக்கலாம் அல்லது ஒப்பந்தத்தில் இருந்து விலகலாம்.

**ஒப்பந்தம் நிறைவேற்றுதல்.**

- **ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது:** ஒப்பந்தம் நிறைவேற்ற நிர்ணயிக்கப்பட்ட நாளில், வில்பிரட் ₹ 50,000 செலுத்தினார். வில்லியம் பசுவை ஒப்படைத்தார். இரு தரப்பினரும் ஒப்பந்தத்தின் கீழ், தங்கள் கடமைகளை நிறைவேற்றினர்.

**ஒப்பந்த மீறுகை (Breach of contract):**

- ஒப்பந்தம் நிறைவேற்ற நிர்ணயிக்கப்பட்ட நாளில், ஒப்புக்கொண்டபடி ₹ 50,000 கொடுக்க வில்பிரட் தவறிவிட்டார். அவர் ஒப்பந்தத்தை மீறியுள்ளார்.

- நிர்ணயிக்கப்பட்ட நாளில், வில்பிரட் ஒப்புக்கொண்டபடி வில்லியத்திடம் ₹ 50,000 கொடுக்க முன்வந்தார். ஆனால் வில்லியம் பணத்தை பெற்றுக் கொண்டு ஒப்பந்தப்படி பசுவை ஒப்படைக்கத் தவறி விட்டார். அவர் ஒப்பந்தத்தை மீறியுள்ளார்.

**எதிர்நோக்கிய மீறுகை (Anticipatory breach):**

- ஒப்பந்தம் செயல்படுத்தப்பட 30 தினங்கள் என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கும் போது, ஒப்பந்த நாளில் இருந்து பத்தாவது நாளில், வில்லியம் நான் பசுவை விற்கவில்லை என அறிவித்து விட்டார். ஒப்பந்தத்தின் கீழ் அவரது கடமை முப்பதாவது நாளில் தான் எழுகின்றது. அதற்கு முன்னரே அவ்வாறு அறிவிப்பது எதிர்நோக்கிய மீறுகை (anticipatory breach) என்று அழைக்கப்படுகின்றது.

- வில்லியம் நான் பசுவை விற்கவில்லை என அறிவித்த உடன், வில்லியம் ஒப்பந்த மீறுதல் செய்து விட்டார் என உடனடியாக வில்பிரட் இழப்பீடு கோரலாம் அல்லது ஒப்பந்தம் செயல்படுத்தப்பட குறிக்கப்பட்ட நாள் வரை காத்திருந்து, ஒப்பந்த மீறுகைக்கு இழப்பீடு கோரலாம்.

- அவ்வாறு வில்பிரட் உடனடியாக இழப்பீடு கோராமல், ஒப்பந்தம் செயல்படுத்தப்பட குறிக்கப்பட்ட நாள் வரை காத்திருந்தால், நான் பசுவை விற்கவில்லை என அறிவித்த வில்லியம் , பின்னர் மனம் மாறி ஒப்பந்த செயல்பாட்டிற்கு குறிக்கப்பட்ட நாளில் பணத்தைப் பெற்றுக் கொண்டு பசுவை ஒப்படைக்கலாம். வில்பிரட் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

****

# அத்தியாயம் 2
# ஒப்பந்தம் (contract) என்றால் என்ன?

**ஒப்பந்தம் (contract):** பிரிவு 2(ஏ)-ல் ஒப்பந்தம் (contract) வரையறுக்கப்பட்டுள்ளது

- அதன்படி "சட்டத்தால் செயல்படுத்தக் கூடிய உடன்படிக்கை (agreement), ஒரு ஒப்பந்தம்".
- பிரிவு 2(ஏ)-ன் படி, சட்டத்தால் செயல்படுத்த முடியாத உடன்படிக்கை (agreement) செல்லாது.

எளிமையான வார்த்தைகளில் கூறுவதானால்,

- சட்டத்தால் செயல்படுத்தப்படும் உடன்படிக்கைகள் (legally enforceable agreement), ஒப்பந்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- மீதமுள்ள உடன்படிக்கைகள் செல்லாத உடன்படிக்கைகள்.

**ஒப்பந்தம் உருவாகும் நிலைகள்**

**முனைவு (offer):** ஒப்பந்த உருவாக்கத்தின் முதல் நிலை முனைவைத் தெரிவித்தல் ஆகும்.

பிரிவு 2 (அ) -ன் படி, முனைவு என்பது, ஒரு நபர்,

- எதையும் செய்வதற்கான (act) தனது விருப்பத்தை அல்லது செய்வதிலிருந்து விலகி இருப்பதற்கான (omission) தனது விருப்பத்தினை மற்றொருவரிடம் தெரிவிக்கின்றார்.
- அத்தகைய செயலுக்கு அல்லது செய்வதைத் தவிர்ப்பதற்கு மற்றொருவருடைய இசைவை வேண்டுகின்றார்.

அவ்வாறு தெரிவிப்பது முனைவு (proposal) எனப்படுகின்றது.

<u>எடுத்துக்காட்டு:</u> வில்லியம் என்பவரும் வில்பிரட் என்பவரும் சந்தித்தனர். வில்லியம் தனது பசுவை ₹50,000-க்கு விற்க, வில்பிரட்டிடம் விருப்பம் தெரிவித்தார். இது ஒரு முனைவு (offer).

**ஏற்றுக்கொள்வது (acceptance):** ஒப்பந்த உருவாக்கத்தின் இரண்டாம் நிலை முனைவை ஏற்றுக்கொள்ளல். ஏற்றுக்கொள்வது (acceptance) என்பதை, பிரிவு 2(ஆ), பின்வருமாறு வரையறுக்கின்றது.

- யாருக்கு முனைவு தெரிவிக்கப்படுகின்றதோ, அந்த நபர் அதற்கு தனது ஒப்புதலைக் குறிக்கும் போது, அந்த முனைவு ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

<u>எடுத்துக்காட்டு:</u> வில்லியம் தனது பசுவை ₹50,000-க்கு விற்க விருப்பம் தெரிவித்திருக்கும் போது, வில்பிரட் பசுவை ₹50,000 விலைக்கு வாங்க ஒப்புக் கொண்டார். இது ஒரு ஏற்றுக்கொள்ளல் (acceptance).